**தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம் - 2023**

**-----------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடைய குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் ஊடாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அது சம்பந்தமாக நிர்வகிக்கின்ற தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பதுபற்றி பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு பொருட்டு நிறுவகத்தின் தொடர்ந்தியங்குதல் தொடர்பிலான அடிப்படையை பயன்படுத்தும் ஏற்புடமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களிலுள்ள அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மீது எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இல்லாவிடின் எனது அபிப்பிராயத்தை திரிபுபடுத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிறுவகத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க பணியகம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் பிரிவுகள் 5 (1) மற்றும் (2) | சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, நிறுவகத்தின் அலுவல்களின் நிர்வாகமும், முகாமையும் கட்டுப்பாடும் நிறுவகத்தின் ஆளுநர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நிறுவகத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்காக சட்டத்தினால் ஆளுநர் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள, விதித்துரைக்கப்பட்டுள்ள அல்லது சுமத்தப்பட்டுள்ள தத்துவம், கடமை மற்றும் பணிகளை செயற்படுத்துவதற்கு ஏற்புடையதாக 2022 | தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டு பொருட்டு நியமிக்கப்பட்டிருந்த ஆளுநர் சபையின் உறுப்பினர்கள் பதவி விலகியுள்ளமையினால், 2022.06.02ஆம் திகதியன்று புதிய ஆளுநர் சபையை நியமிக்குமாறும், ஆளுநர் சபை பொருட்டு பதவிவழியால் நியமிக்கப்படுகின்ற உயர் கல்வி அமைச்சின் உறுப்பினரை நியமிக்குமாறும் நிறுவகம் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. அது அவ்வாறு இருந்தபோதிலும், நிறுவகக் குழுக் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாக இருத்தல் வேண்டுமென நிறுவகச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால், ஆளுநர் | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் முறையே ஒருமுறை மற்றும் இரண்டு முறைகள் மட்டுமே நிறுவகத்தின் ஆளுநர் சபை ஒன்றுகூடியது. | சபையின் தலைவர் மற்றும் பதவிவழியிலான ஏனைய ஐந்து உறுப்பினர்களின் நடப்பெண் சகிதம் பணிப்பாளர் சபை 02 கூட்டங்கள் 2023ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன என. | |
| (ஆ) | பிரிவு 16(1) | சட்டத்தின் கீழ் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்குத் தேவையான குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தொழில்நுட்ப குழுக்களை சபையினால் நியமித்திருக்க முடியுமான போதிலும், அத்தகைய குழுக்கள் நியமிக்கப்படவில்லை. | எதிர்கால வாய்ப்புகள் மற்றும் நிறுவகத்தின் எதிர்கால விரிவாக்கத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக சட்டத்தில் இவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரையில் அவ்வாறான தேவைப்பாடு எழாத காரணத்தினால் தொழில்நுட்பக் குழுக்களை நிறுவகம் நியமிக்கவில்லை. எதிர்காலத்தில், நிறுவகத்தின் நிதித் திறன் அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்த போதுமானதாக இருக்குமிடத்து, ஆளுநர் சபையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களின் பேரில் சட்டத்தின் 16(i) பிரிவு பிரகாரம் தொழில்நுட்பக் குழுக்கள் நியமிக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (இ) | 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் உபபிரிவு 3 (ஈ) | நூலக மற்றும் தகவல் வழங்கும் சேவைகளை நிறுவுதல் மற்றும் அவற்றை பராமரித்தல் இந்நிறுவகத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று ஆன போதிலும், அத்தகைய தகவல் வழங்கும் சேவைகள் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம் 2023 ஆம் ஆண்டிலிருந்து திறைசேரியிலிருந்து எவ்வித நிதியேற்பாட்டையும் பெறவில்லை. ஆகையினால், தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம் உழைக்கும் வருமானத்திலிருந்து நூலகம் ஒன்றை அமைக்கும் பணி எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். மேலும், இணையதளத்தில் தனி பக்கமொன்று அமைத்து அதனூடாக இலத்திரனியல் வெளியீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இலத்திரனியல் வெளியீட்டை உள்ளடக்கிய இணையப்பக்கத்தை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகச் சட்டத்தின் பிரிவு 3 (உ) | ஒத்த குறிக்கோள்களைக் கொண்ட தேசிய மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புக்கள், சங்கங்கள் மற்றும் கழகங்கள் போன்றவற்றுடன் நெருங்கிய ஒத்துழைப்புடன் செயல்பட வேண்டிய போதிலும், அத்தகைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயல்பட தேவையான நடவடிக்கைகளை நிறுவகம் எடுத்திருக்கவில்லை. | இந்தியாவின் V V Giri National Labour Institutė நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கு 2008 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 2008 முதல் 2016 வரை நடைமுறையில் இருந்தது. அதன்பிறகு, 2020ஆம் ஆண்டு மீண்டும் இதை அமுல்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும், பல்வேறு காரணங்களால் அது இடம்பெறவில்லை என்பதுடன், எதிர்காலத்தில் இந்தியாவின் V V Giri National Labour Institutė நிறுவனத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படும். இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அவதானிப்பிற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிற்பாடு, கொரியா மற்றும் யப்பான் நாடுகளில் தொழிற்கற்கைகள் தொடர்பான நிறுவனங்களுடன் இணைப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்காக சருவதேச தொழில் அமைப்பிலிருந்து ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படகிறது என. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 11 ஆம் திகதிய ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கை | 2023 ஆம் ஆண்டில் பதவியினர் பொருட்டு போனஸ்/ஊக்குவிப்புக் கொடுப்பனவு செலுத்துவதற்கு முன்னர் 2022 ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து 30 சதவீதமான தொகை திறைசேரிக்கு பணமனுப்ப வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாமல், ரூபா325,000 போனஸாக செலுத்தப்பட்டிருந்ததுடன், திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 2,315,712 தொகை செலுத்த வேண்டிய | 2023 ஆம் ஆண்டு பொருட்டு திறைசேரிக்கு செலுத்த வேண்டிய ரூபா2,315,712.00 தொகையை செலுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், உரிய கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய வங்கிக் கணக்குகள் பற்றி உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பொது திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விரைவாக பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதுபற்றி 2023 வருடாந்த கணக்குகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது என. | சட்டத்தின் ஏற்பாடுகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |

மீதியாக காட்டப்பட்டிருந்தது

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்ண்டிற்கான செயல்பாட்டு விளைவு ரூபா11,095,653 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா18,874,140 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவுகளில் ரூபா7,778,487 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல் மற்றும் பிற செயல்பாட்டு செலவுகள் அதிகரிப்பு என்பன இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டுநெறிகள்-2006 பிரகாரம், முறையான மதிப்பீடுகளை தயாரித்து சோதனைகளை மேற்கொள்ளாமல், பழுதுபார்க்கப்பட்ட குளிரூட்டிகள் தொடர்பான விவரங்களைப் பேணாமல் அதேநேரம் பழுதுபார்த்தல் சரியாக செய்யப்பட்டதா என்பதை உறுதிப்படுத்தாமல், 2023 ஆம் ஆண்டில் 07 சந்தர்ப்பங்களில் குளிரூட்டிகளை பழுதுபார்ப்பதற்காக ரூபா 1,096,250 செலவிடப்பட்டிருந்தது<br><br>குளிரூட்டி பழுதுபார்ப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய வழங்குநர் தவிர, எஞ்சிய வழங்குநர்களின் விலைமனுக்கள் போலியாக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன், ரூபா 481,825 செலவுசெய்து அனைத்து உபகரணங்களும் இட்டு பழுதுபார்க்கப்பட்ட இரண்டு குளிரூட்டிகள் மீண்டும் ரூபா 91,075 செலவுசெய்து பழுதுபார்க்கப்பட்ட போதிலும் குறித்த குளிரூட்டிகள் செயல்படாமல் இருந்தன. | பழுதுபார்த்தல் சரியானது என உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் தெரிவிக்கிறேன். அது NILS/AD/03/21/03 (PRO கோவையில் கோப்பிடப்பட்டது. எதிர்காலத்தில், பெறுகை செயன்முறையைத் தொடங்குவதற்கு முன், பெறுகை ஆவணங்கள் சரியாக தயாரிக்கப்பட்டு, பணிகள் சரியாக மேற்கொள்ளப்படும் என அறிவிப்பதுடன், இந்த குளிரூட்டியின் பராமரிப்பு நிறுவகத்தின் அவசர தேவைப்பாட்டின் நிமித்தம் செய்ய வேண்டி நேரிட்டது எனவும், அந்த ஆண்டில் நிறுவகத்திற்கு அதிக விலை கொடுத்து புதிய குளிரூட்டியை கொள்வனவுசெய்ய ஆற்றல் இருக்கவில்லை என. | பெறுகை வழிகாட்டுநெறிகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |
| (ஆ) | தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்தின் 2021/2022 ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கை 25 | எதிர்காலத்தில் அனைத்து அச்சுப் பணிகளும் குறித்துரைத்த தரத்தில் | பெறுகைகள் வினைத்திறனாக மேற்கொள்ள |

| | | |
|---|---|---|
| பிரதிகள் அச்சிட மற்றும் 6 மென் பிரதிகள் பொருட்டு ரூபா 522,930 செலவிடப்பட்டிருந்ததுடன், அச்சிடல் பணிகளை மேற்கொள்ளும்போது Offset முறையில் செய்வதற்கு உடன்பட்டு கட்டளை ஒப்படைக்கப்பட்ட போதிலும், அந்த முறையிலிருந்து விடுபட்டு Digital முறையில் அச்சிடப்பட்ட அச்சு பிரதிகள் பொருட்டு செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையின் முகப்பு அட்டையும் உரிய தரத்தில் இல்லை என அவதானிக்கப்பட்டது. | செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பிற்பாடு பணம் செலுத்தப்படும் என. | வேண்டும். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தை தாபிக்கும் குறிக்கோள்களை அடைவதற்காக 2020 யூலை மாதத்தில் ஆராய்ச்சி வெளியீடு மற்றும் செயற்றிட்டப் பிரிவு ஒன்று தாபிக்கப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரைக்கும் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு அலுவலர் ஒருவர் முறையாக நியமிக்கப்படாததால், அது எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைவதில் பாதகமாகப் பாதித்திருந்தது. | வியாபார ஊக்குவிப்பு அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான வெற்றி அறிவித்தல் தயாரிக்கப்பட்டு, அமைச்சு செயலாளரிடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், விரைவில் அது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகம் ஆகியவற்றின் இணையதளங்களில் வெளியிடப்படவுள்ளதுடன், அதற்குப் பிற்பாடு தகுதியான அலுவலர் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பதவிக்கு ஆட்சேர்க்கப்படவுள்ளார் என. | எதிர்பார்த்த குறிக்கோள்களை அடைவதற்கு செயலாற்றுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினரில் உள்ளக கணக்காய்வாளர் பதவி இருந்த போதிலும், சம்பந்தப்பட்ட வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவு, உரிய பதவியை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், உள்ளகக் கணக்காய்வு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. | நிறுவகத்தின் அலுவலர்களை ஆட்சேர்த்தல் நிறுவகத்தின் தேவைப்பாட்டின் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்படுகிறதுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் அமைச்சு செயலாளரின் அறிவுறுத்தல்களின்படி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் | உள்ளகக் கணக்காய்வு முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையினால், உள்ளகக் கணக்காய்வுப் பணிப்பொறுப்பு உரியவாறு நிறைவேற்றப்படுகிறது என. | |

**4.2 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16ஆம் திகதிய 01/2001 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகளுக்கான வழிகாட்டுநெறிக் கோவையின் 4.2 (ஏ) பிரகாரம், கணக்காய்வுக் குழு 03 மாதங்களுக்கு ஒருமுறை ஒன்றுகூடி அதன் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், 2023 இல் கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெறவில்லை. | நிருவாகக் குழு உரியவாறு நியமிக்கப்படாத காரணத்தினால் 2023 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தை நடத்த முடியாமல் போனதுடன், 2024 ஆம் ஆண்டு முதல் காலாண்டு கூட்டம் ஏற்கனவே (2024/01/10) நடத்தப்பட்டதுடன், இரண்டாம் காலாண்டு பொருட்டான கணக்காய்வுக் குழுக் கூட்டம் 2024/05/10ஆம் திகதி நடத்துவதற்கு திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது என. | திறைசேரி வழிகாட்டுநெறிகள் பிரகாரம் செயலாற்றுதல் வேண்டும். |